முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நாரதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.05.2019, சனிக்கிழமை

1. **தருமபலம் கொண்ட தவசியே**
   **தரணி காத்திடும் ஞானியே**
   **வறுமை எனும் பசிபிணி விரட்ட**
   **வள்ளலாய் வந்த தேசிகனே**
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் **விகாரி தகர் திங்கள்**
   **ஆசிபட மூவேழு திகதி காரி வாரம்**
   **(விகாரி வருடம் சித்திரை மாதம் 21ம் நாள் 04.05.2019, சனிக்கிழமை)**
   அருளுவேன் நித்ய பிரசன்ன ஆசி
3. **ஆசியை நாரதர் யானும் உரைப்பேன்**
   அரங்கஞானி அருட்தயவு
   ஆசி பெற்ற மக்கள் வாழ்வில்
   அனைத்தும் வெற்றி காண நேரும்
4. நேருமைபட சன்மார்க்க நெறியை
   நிலவுலகில் நழுவவிடா தொடர்ந்து
   முருகா எனும் செபதபத்துடன்
   முழுமதி பூசைக்கு அரங்கர் தடம்
5. அரங்கர் தடம் வரும் மக்களுக்கு
   ஆபத்து இடை கண்டம் இல்லை
   அரங்கா எனும் அனுதினசெபம்
   அளவிலா செய்து வருபவர்க்கு
6. வருபவர்க்கு தன் சுயதேட்டில்
   வருவாய் லாபமும் யோகமும்
   தருமவழி தொடரும் மக்களுக்கு
   தனித்துவமும் முதன்மை நிலையும் காணும்
7. காணவே அரங்கனை கண்டு
   காப்பான திருவடி தீட்சை
   ஞானமென ஏற்ற மக்களுக்கு
   ஞானவாழ்வு கைகூடும் என்பேன்
8. என்கவே எண்ணம் தூய்மைபெற
   எண்ணிய காரியம் வெற்றிபெற
   நன்மைதரும் ஞான சக்தியாகவுள்ள
   ஞானதேசிகன் ஆசி பெற வேண்டும்
9. வேண்டி மக்கள் வந்து தொடர
   வேண்டுவன எல்லாம் நடந்தேறும்
   தொண்டென இணைந்து உலகில்
   தொண்டர்களான மக்கள் வாழ்வில்

10. வாழ்வில் நிலவுலகில் திருவருளாம்
வடிவேலனின் அருளடையக் கூடும்
ஊழ்வென்று மறுமை என்பதில்லா
உயர்தன்மை அடையக் கூடும்

11. கூடவே ஞான யுகவாழ்வுக்கு
குருராஜன் காட்டும் வழிதன்னை
நாடவே சகலரும் ஞானயுகவாழ்வு தகுதி பெறுவர்
நாட்டிய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நாரதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமபலத்தினை பெற்றிட்ட மகா ஞான தவசியே தருமபலத்தினால் தாம் செய்திட்ட தவபலத்தினால் இவ்வுலகை காத்து ரட்சித்திடும் மகா ஞானியே வறுமை என்கிற பசிப்பிணியை விரட்டி மக்களைக் காக்க வள்ளல் ஞானியாய் வந்திட்ட அவதார ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 21ம் நாள் 04.05.2019, சனிக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே நாரதர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நாரதர்.

அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருட்தயவினை பெற்றிட்ட மக்களின் வாழ்வினில் எல்லா செயல்களும் வெற்றியாகவே நடந்திடும். உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகான் உலகிற்கு அளித்திட்டதும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிட வல்லதும் உண்மை ஞானம் அளிப்பதுமாகிய அரங்கரின் தூயநெறிகளை அவரவரும் வழுவாமல் ஏற்றுக் கொண்டு வாழ்வினில் கடைப்பிடித்து வருவதுடன் அரங்கர் பௌர்ணமிதோறும் நடத்துகின்ற ஞானியர் சிறப்பு வழிபாடுகளிலே கலந்து முருகா, முருகா, முருகா என்றே முருகப்பெருமானின் ஜெபதபங்களை செய்து அரங்கரிடத்து ஆசிகளை பெறுகின்ற மக்களுக்கு எந்தவிதமான ஆபத்துகளும் வாராது, விபத்து போன்ற இடைக்கண்டங்களும் வாராது.

அரங்கா, அரங்கா, அரங்கா என மனம் உருகி தினம் தினம் மறவாமல் அரங்கரின் மீது பக்தி செலுத்தி பயபக்தியுடன் பூஜைகளை தவறாமல் செய்து வருகின்றவர்களுக்கு அவரவரின் தொழிலில் நல்ல வருவாயும், லாபமும் பெருகி யோகமான நிலைகளை அடைவார்கள்.

அரங்கரின் உபதேசவழி நடந்து தருமங்கள் செய்து தருமவழியினில் நடந்து வருகின்றவர்களுக்கு தனித்துவமான முதன்நிலை கிடைத்திடும். அரங்கமகானை பயபக்தியுடன் பணிந்து வணங்கி தீட்சை உபதேசம் அடைந்திட திருவடி தீட்சை பெற்று வருகின்ற மக்களுக்கு ஞானவாழ்வு கைகூடிடும்.

அவரவர்கள் எண்ணிய எண்ணங்கள் வெற்றி பெற வேண்டுமானால், அவர்களது எண்ணங்கள் தூய்மைபெற வேண்டுமானால், உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசிகளை அவர்கள் அவசியம் பெற்றிட வேண்டும். ஆதலினால் மனதினில் வேண்டுகோள் வைத்து அரங்கரை பணிந்து ஆசிகளை பெற்றிட்டால், ஆசிகளை பெற்று அரங்கர் உபதேசிக்கும் வழியிலே வாழ்ந்திட்டால் அவரவர் எண்ணங்கள் தூய்மையடைவதுடன் எண்ணிய எண்ணமும் வேண்டிய எல்லாம் நடந்தேறும்.

அரங்கரின் அறப்பணிகளிலே தொண்டுகள் செய்து அரங்கருடன் தொண்டுகளில் இணைந்து செயல்பட தொண்டர்களாக ஆகி வாழ்ந்து வர, அவர்களது வாழ்வினிலே முருகப்பெருமானின் திருவருளைப் பெற்று சிறப்படைவார்கள். அவர்களது ஊழ்வினைகளையும் வென்று மறுமை எனும் மறுபிறப்பு இல்லாத உயர் ஞானத்தன்மையை அடைந்திடுவர்.

**ஞானயுக வாழ்விற்கு சற்குருநாதன், யுகமாற்ற தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் வழிகளை ஏற்று கடைப்பிடித்திட, கடைப்பிடித்தோர் எல்லாம் ஞானயுக வாழ்வினை பெற்று சிறப்படைவார்கள்** எனக் கூறுகிறார் மகான் நாரதமுனிவர்.

–சுபம்–